புக்கிட் பிந்தாங்கில்

# போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இருவழிப் பாதைத் திட்டம் அமல்




கோலாலம்பூர், மே 4-

கடந்த புதன்கிழமை தொடங்கி ஜாலான் சுல்தான் இஸ்மாயில் - ஜாலான் ராஜா சூலான் சாலைச் சந்திப்பில் இருந்து ஜாலான் சுல்தான் இஸ்மாயில் - ஜாலான் புக்கிட் பிந்தாங் சாலைச் சந்திப்பு வரை ஒரு வழிப்பாதை இருவழிப் பாதையாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனையடுத்து அங்கு போக்குவரத்தைக் கட்டுப்படுத்து வதற்கு 20 போலீஸ்காரர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்துடன் இணைந்து கோலாலம்பூர் போக்குவரத்துப் புலனாய்வு அமலாக்கத் துறை இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறது என்று கோலாலம்பூர் போலீஸ் தலைவர் டத்தோ அஸ்ரி அக்மால் அயோப் கூறினார்.

புக்கிட் பிந்தாங் சுற்றுப்பகுதியில் மோசமடைந்து வரும் சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர் விவரித்தார். புக்கிட் பிந்தாங்கிலும் ஜாலான் சுல்தான் இஸ்மாயில் பகுதியிலும் போக்குவரத்துப் போலீஸ்காரர்கள் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

வாகனமோட்டிகள் இந்தப் பாதையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதை முழுமையாகப் புரிந்து கொள்ளும் வரையில் போலீஸ்காரர்கள் அங்கு கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் சொன்னார்.

நேற்று ஜாலான் சுல்தான் இஸ்மாயில் பகுதியில் போலீஸ்காரர்களின் பணியைப் பார்வையிட்ட பிறகு அவர் இதனைத் தெரிவித்தார். உச்ச நேரத்தில் ஜாலான் கம்போங் பாண்டானில் இருந்து ஜாலான் சுல்தான் இஸ்மாயில் வரை ஒருவழிப் பாதையாக அங்கு மாற்றப்படும்.

காலை 9.00 மணிக்குப் பிறகு அது பின்னர் இருவழிப் பாதைக்குத் திரும்பும் என்று அவர் சொன்னார். ஒருவழிப் பாதை இருவழிப் பாதையாக மாற்றப்பட்டதன் வாயிலாக போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம். இதன்மூலம் விபத்துகளைத் தவிர்க்க முடியும் என்பதோடு போக்குவரத்தும் சீராக அமையும் என்றார் அவர்.



SA